# ஆழியார் சாலையில் உலா வரும் ஒற்றை யானையால் சுற்றுலா பயணிகள் பீதி



▶ பொள்ளாச்சி-ஆழியார் சாலையில் உலா வரும் ஒற்றை யானையால் சுற்றுலா பயணிகள் பீதியடைந்துள்ளனர்.

**ஆனைமலை, பிப். 27:** பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் சாலையில் உலா வரும் ஒற்றை யானையால் சுற்றுலா பயணிகள் பீதியடைகின்றனர்.

பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட வனப்பகுதியில் தற்போது மழை இல்லாததால், நீர் நிலைகள் வறண்டு போயிள்ளன. இதனால் வன விலங்குகள் இடம்பெயர்ந்து ஆழியார் அருகே உள்ள குரங்கு அருவி மற்றும் வால்பாறை ரோடு ரோட்டில் கடந்த சில வாரங்களாக காலை மற்றும் மாலைநேரத்தில், யானைகள் அங்குமிங்குமாக உலா வருவது அதிகரித்தது.

நேற்று முன்தினம் காலையில், குரங்கு அருவியின் எதிரே உள்ள நவமலை ரோட்டுக்கு வந்த ஒன்றை யானை, வால்பாறை ரோடு வழியாக ஆழியார் அணையின் பின்புறத்தில் உள்ள நீர்தேக்க பகுதிக்கு சென்றது. பின், அறிவுத்திருக்கோயில் அருகே உலா வந்துள்ளது.

செல்லும் வழியில் ஆங்காங்கே உள்ள மரக்கிளைகளை முறித்து உண்டது. பின், அறிவுத்திருக்கோயில் அருகே வால்பாறை ரோட்டில் பகல் நேரத்திலேயே அங்குமிங்குமாக வந்த யானையால், கடைகளிலும், ஆங்காங்கேயும் நின்ற சுற்றுலா பயணிகளும் அதிர்ச்சியடைந்து அங்குமிங்குமாக ஓடினர்.

மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிக்கு வந்த யானையால் பதட்டம் ஏற்பட்டது. பின், சவகாசமாக தண்ணீர் குடித்துவிட்டு சிறிது நேரத்தில் அடர்ந்த வனத்தை நோக்கி நகர்ந்தது. நவமலை ரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் யானைகள் நடமாட்டம் இருப்பதால், சுற்றுலா பயணிகள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் மீண்டும் வருவதை தடுக்க வனத்துறையினர் கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# வெற்றிலை வரத்து குறைவால் ஒரு கட்டு ரூ.3 ஆயிரத்துக்கு ஏலம்

**பொள்ளாச்சி, பிப். 27:** பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் நேற்று வெற்றிலை ஏலம் நடைபெற்றது. இதற்காக சுற்று வட்டார கிராமம் மற்றும் திருச்சி, கரூர் உள்ளிட்ட வெளியூர்களில் சாகுபடி செய்யப்படும் வெற்றிலைகளை விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்தனர். அதனை சுற்று வட்டார கிராம பகுதி மற்றும் பாலக்காடு, திருச்சூர் வியாபாரிகள் நேரில் வந்து வாங்கி செல்கின்றனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக, வெயிலின் தாக்கத்தால் வெற்றிலை கட்டு வரத்து அதிகமானதால், ஒரு கட்டு வெற்றிலை அதிகபட்சமாக ரூ.2500க்கு ஏலம்போனது.

ஆனால், நேற்று நடந்த சந்தை நாளில், சுற்றுவட்டார பகுதியிலிருந்து வெற்றிலை கட்டுகள் ஓரளவு வரப்பெற்றாலும், வெளியிடங்களில் இருந்து வெற்றிலை வரத்து மிகவும் குறைவானது.

இதனால், அவை கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் விடப்பட்டது. வெற்றிலை வரத்து குறைவால், வியாபாரிகள் போட்டிபோட்டு வெற்றிலையை ஏலம் மூலம் வாங்கினர். இதில், சுமார் 6 ஆயிரத்து 500 முதல் 7 ஆயிரம் எண்ணம் கொண்ட ஒரு கட்டு வெற்றிலை ரூ.1800 முதல் அதிகபட்சமாக ரூ.3 ஆயிரம் வரை என, கடந்த வாரத்தைவிட கூடுதல் விலைக்கு ஏலம் போனது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

மார்ச் 1ம் தேதி

# முதல்வரின் பிறந்தநாளையொட்டி நலத்திட்ட உதவிகள்

## திமுக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்



▶ கோவை தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் வரதராஜன் பேசினார்.

**பொள்ளாச்சி, பிப். 27:** கோவை தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம், பொள்ளாச்சி பல்லடம் ரோட்டில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலையில் நடைபெற்றது. நகர பொறுப்பாளர் வடுகை பழனிசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய பொறுப்பாளர்கள் வக்கீல் தேவசேனாதிபதி, மருதவேல், துரை, ராஜூ, சக்திவேல், யுவராஜ், கிரி, கன்னிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் வரதராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பனப்பட்டி வேலுமணி, வக்கீல் அதிபதி, தர்மராஜ், நகர துணை செயலாளர் கார்த்திகேயன், வக்கீல் மீரான், பால்பாண்டி, டாக்டர் சரவணன், ரவிசந்திரன், குமரேஷ், சுகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின் போது, "நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில், கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள் வெற்றிக்கு உழைத்த, முதல்வர் மு.க.ஸ்டாலின், கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் செந்தில்பாலாஜி, மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கும், வெற்றிபெற செய்த வாக்காளர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

மார்ச் 1ம் தேதி, திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் 68வது பிறந்தநாளையொட்டி, மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், மரகன்றுகள் நடுவது, நலத்திட்ட உதவிகள் வழங்குவது. உள்ளாட்சி தேர்தலில் களப்பணியாற்றியவர்கள், தேர்தல் பொறுப்பாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது' என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பெண் தீக்குளித்து தற்கொலை

**கோவை, பிப். 27:** கோவை ராமநாதபுரம் பாரதி நகர் முதல் வீதியை சேர்ந்தவர் சுரேஷ்குமார் (32). இவர் மருத்துவ பிரதிநிதியாக பணி புரிந்து வருகிறார். இவருடைய மனைவி செல்வி என்கிற மாரிச்செல்வி (26). இவர்களுக்கு திருமணமாகி ஒரு ஆண்டு ஆகிறது. குழந்தை இல்லை. கணவன்-மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்ப தகராறு இருந்து வந்தது. நேற்று முன்தினம் இருவருக்கும் இடையே குடும்ப தகராறு ஏற்பட்டது. திருமண நிகழ்ச்சிக்காக சுரேஷ்குமார் மதுரை சென்றார். செல்வி மிகுந்த மன உளைச்சலில் இருந்து வந்தார். இதையடுத்து வீட்டில் தனியாக இருந்த செல்வியை பெற்றோர் சாய்பாபா காலனியில் உள்ள தங்களது வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அவர் நேற்று காலையில் வீட்டில் யாரிடமும் சொல்லாமல் ராமநாதபுரத்தில் உள்ள தனது வீட்டிற்கு வந்து விட்டார். பின்னர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து ராமநாதபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிணத்துக்கடவு பகுதியில்

## கடைகளில் திருடிய வாலிபர் கைது

**கிணத்துக்கடவு, பிப். 27:** கிணத்துக்கடவு அருகே சிக்கலாம்பாளையம் டாஸ்மாக் கடை அருகே நேற்று முன்தினம் கிணத்துக்கடவு போலீசார் வழக்கமான சோதனை மேற்கொண்டு இருந்தனர். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் சுற்றித்திரிந்த வாலிபரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது அவர் திருப்பூரை சேர்ந்த பாலாஜி (33) என்பதும், கடந்த 15 மாதங்களாக திருட்டு வழக்கில் கைதாகி கோவை மத்திய சிறையில் இருந்துவிட்டு தற்போதுதான் வெளியே வந்து கிணத்துக்கடவில் உள்ள தனது பாட்டி வீட்டில் தங்கியிருந்ததும், குடிக்க பணம் இல்லாததால் சிக்கலாம்பாளையத்தில் உள்ள 2 கடைகளில் திருடியதும், கோவை மட்டுமின்றி வெளிமாவட்ட காவல் நிலையங்களிலும் பல்வேறு திருட்டு வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. பின்னர் போலீசார் வழக்குப்பதிந்து பாலாஜியை கைது செய்தனர்.

## கோமங்கலத்தில் நாளை மின்தடை

**பொள்ளாச்சி, பிப். 27:** பொள்ளாச்சி அருகே கோமங்கலம் துணை மின் நிலையம் மற்றும் அதனை சார்ந்த உயர் மின்பாதைகளில், மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடப்பதால், கோமங்கலம்புதூர், கோமங்கலம், சங்கம்பாளையம், பாண்ணைக்கிணறு, கோழிக்குட்டை, சீலக்காம்பட்டி, முக்கூடு ஜல்லிப்பட்டி, மலையாண்டிபட்டினம், கெடிமேடு, கூலநாயக்கன்பட்டி, லட்சுமாபுரம் செட்டிபாளையம், தேவநல்லூர், கோலார்பட்டி, கோலார்பட்டி சுங்கம், நல்லாம்பள்ளி, கஞ்சம்பட்டி, பூசாரிபட்டி ஆகிய பகுதிகளில் நாளை (28ம் தேதி) காலை 10 மணி முதல் 4 மணி வரை மின்தடை ஏற்படும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொள்ளாச்சி மார்க்கெட் நிலவரம்
### உழவர் சந்தை

| | | | |
|---|---|---|---|
| கத்தரி(கிலோ) | ரூ.68 | சாம்பல்பூசணி | ரூ.25 |
| சின்னவெங்காயம் | ரூ.30 | உருளைக்கிழங்கு | ரூ36 |
| வெண்டை | ரூ.28 | சர்க்கரைபூசணி | ரூ.30 |
| பெரிய வெங்காயம் | ரூ.39 | காலிபிளவர் | ரூ.40 |
| தக்காளி(நாட்டுரகம்) | ரூ.5 | **பழவகைகள் (கிலோ)** | |
| தேங்காய் | ரூ.30 | பூவன் | ரூ.28 |
| முருங்கக்காய் | ரூ.80 | செவ்வாழை | ரூ.40 |
| அவரை | ரூ.50 | தேன்வாழை | ரூ.35 |
| சேனை | ரூ.30 | சப்போட்டா | ரூ.60 |
| புடலை | ரூ.25 | மாம்பழம் | ரூ.60 |
| மரவள்ளி | ரூ.30 | பப்பாளி | ரூ.32 |
| பீர்க்கங்காய் | ரூ.40 | **பூக்கள் (கிலோ)** | |
| கேரட் | ரூ.95 | மல்லிகை(கிலோ) | ரூ.1050 |
| சுரைக்காய் | ரூ.10 | முல்லை | ரூ.800 |
| பீட்ரூட் | ரூ.56 | ஜாதிமுல்லை | ரூ.800 |
| பாகற்காய் | ரூ.45 | சம்மங்கி | ரூ.180 |
| வெ.முள்ளங்கி | ரூ.10 | அரளி | ரூ.250 |
| முட்டைகோஸ் | ரூ.45 | சில்லிரோஸ் | ரூ.200 |
| கொத்தவரை | ரூ.50 | செண்டுமல்லி | ரூ.150 |
| இஞ்சி(புதியது) | ரூ.30 | கோழிக்கொண்டை | ரூ.160 |
| பச்சைமிளகாய் | ரூ.700 | துளசி | ரூ.40 |
| பீன்ஸ் | ரூ.45 | | |

## அணைகளின் நீர்மட்டம்

| அணை | மொத்த கொள்ளளவு | நீர்மட்டம் அடி | நீர் வரத்து கன அடி | வெளியேற்றம் கனஅடி |
|---|---|---|---|---|
| சோலையார் | 160 அடி | 83.75 | 20.34 | 842 |
| பரம்பிக்குளம் | 72 அடி | 64.70 | 888 | 1067 |
| ஆழியார் | 120 அடி | 85.50 | 793 | 792 |
| திருமூர்த்தி | 60 அடி | 37.35 | 753 | 1086 |
| அமராவதி | 90 அடி | 60.96 | 129 | 755 |

# கேரளாவுக்கு காரில் கடத்த முயன்ற 1100 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்



▶ ஆனைமலை அருகே கேரளாவுக்கு காரில் கடத்திய 1100 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது.

**பொள்ளாச்சி, பிப். 27:** பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை பகுதியில் நேற்று, குடிமைபொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு (புட்செல்) போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். மீன் கரைரோடு காந்தி ஆசிரமம் அருகே ஒரு காரை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது காரிலிருந்து இறங்கிய டிரைவர், போலீசாரின் பிடியிலிருந்து தப்பியோடினார். காரை திறந்து பார்த்த போது, அதில் சுமார் 50 கிலோ எடையில், 22சாக்கு மூட்டைகளில் 1,100 கிலோ ரேஷன் அரிசி இருந்துள்ளது. இதையடுத்து ரேஷன் அரிசியுடன் காரையும், நல்லூரில் உள்ள புட்செல் அலுவலகத்துக்கு கொண்டு வந்தனர். விசாரணையில் ரேஷன் அரிசி கடத்தி வந்தது ஆனைமலையை சேர்ந்த கனகராஜ் என்பதும், பல்வேறு இடங்களில் ரேஷன் அரிசியை சேகரித்து கேரளாவுக்கு கடத்த முயன்றதும் தெரியவந்தது. அவர் மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் தேடி வருகின்றனர்.

எல்லையோர சோதனை சாவடிகளை தாண்டி

# கிராமங்களில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகள்

## தடுக்க கோரிக்கை

**பொள்ளாச்சி, பிப். 27:** பொள்ளாச்சி அருகே எல்லையோர சோதனை சாவடிகளை தாண்டி கிராமங்களில் கழிவு பொருட்களை கொட்டுவதை தடுக்க வேண்டும் என தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கேரள மாநில பகுதியில் இருந்து அவ்வப்போது, கோழிக்கழிவு, மருத்துவக்கழிவு, வாகன உதிரி பாக கழிவு உள்ளிட்ட கழிவு பொருட்கள் மாநில எல்லைப்பகுதியில் உள்ள சோதனை சாவடிகளை தாண்டி, பொள்ளாச்சி கிராமங்களில் கழிவுகளை கொட்டுவதாக புகார் எழுந்துள்ளது. இந்த நிலையில் நேற்று பாலக்காடுரோட்டின் ஒரு பகுதியில் உள்ள கால்வாயில் கழிவுகளை கொட்ட முயற்சித்துள்ளனர். அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த வாகனம் திரும்பி சென்றது. இதில், எல்லைப்பகுதியான மீனாட்சிபுரம், கோவிந்தாபுரம், நடுப்புணி, செமனாம்பதி ரோட்டோரம், மூட்டை மூட்டையாக பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டப்படுவதாக தொடர்ந்து புகார் எழுகிறது. கேரள பகுதியிலிருந்து கொண்டுவரப்படும் கழிவுகளை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கண்டறிந்து போலீசில் தகவல் தெரிவித்தாலும், அச்சம்பவம் தொடர்வது, வேதனையை ஏற்படுத்துகிறது. எனவே, கேரள பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் கழிவுகள், பொள்ளாச்சி அருகே உள்ள கிராமங்களில் ஆங்காங்கே கொட்டுவதை தடுக்கவும், அதனை கொட்டுபவர்கள் யார் என கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவையில் 72 பேருக்கு கொரோனா

**கோவை, பிப். 27:** கோவை மாவட்டத்தில் நேற்று 72 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டனர். இதன் மூலம் மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 3 லட்சத்து 29 ஆயிரத்து 391 ஆக அதிகரித்துள்ளது. அதே போல, கொரோனா தொற்று சிகிச்சை பெற்று வந்த 228 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதன்மூலம் கோவையில் கொரோனா தொற்று சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 25 ஆயிரத்து 795 ஆக அதிகரித்துள்ளது. தற்போது 983 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 613 ஆக உள்ளது.

# காணொலியில் பள்ளி பரிமாற்ற திட்டம்

## மாணவிகள் ஆர்வம்



▶ வால்பாறை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பரிமாற்ற திட்டத்தில் பங்கேற்ற மாணவிகள், ஆசிரியர்கள்.

**வால்பாறை, பிப். 27:** தமிழகத்தில் கடந்த 2016-17ம் கல்வி ஆண்டு முதல் பள்ளி பரிமாற்ற திட்டம் நடைமுறையில் உள்ளது. அரசு, உதவிபெறும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தில் உள்ளன.

பள்ளிக்கு தலா 1000 ரூபாய் வீதம் இதற்கான நிதியை அரசு ஒதுக்கியுள்ளது. கிராம, நகர்ப்புற பள்ளிகள் இடையே மாணவர்கள் பரிமாறிக் கொள்ளப்படுவர். 6, 7, 8ம் வகுப்பு 15 மாணவர்கள் (வகுப்புக்கு தலா 5 பேர் வீதம்), சம்பந்தப்பட்ட பள்ளிகளின் வசதிகள், கற்றல்-கற்பித்தல் நிகழ்வுகள், களப்பயணம் மூலம் பள்ளியைச் சுற்றி உள்ள வளங்கள், இயற்கைச் சூழல், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், தொழிற்சாலைகளை பார்த்து அனுபவம் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது கொரோனா தொற்று காரணமாக இந்தாண்டு மாணவர்கள் வெளியே அழைத்துசெல்ல அனுமதி இல்லை என்பதால் காணொலி மூலம் மாணவர்களுக்கு அரசு அறிவித்த தலைப்புகளில் களப் பயண அனுபவம் வழங்கப்படுகிறது.

வால்பாறை இருதய மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சுதர்லின், ஸ்டெல்லா ஆகியோர் பள்ளி தலைமை ஆசிரியர் மோனிகா உத்தரவின்பேரில், வால்பாறை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு சென்று 15 மாணவிகளுக்கு வரலாற்று சிறப்புமிக்க பாரம்பரிய இடமாக, யுனெஸ்கோ வால் அறிவிக்கப்பட்ட மேற்கு தொடர்ச்சி மலையின் சிறப்பம்சம் குறித்தும், இந்திய பொருளாதாரத்தில் அதன் பங்கு குறித்தும் காணொலி காட்சி தயாரித்து வழங்கினர். மேலும் பள்ளி அருகில் உள்ள தொழிற்சாலைகள், முக்கிய இடங்கள் குறித்து அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு தொகுத்து வழங்கினர்.

இதில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ராபின்சன், மற்றும் பொறுப்பு ஆசிரியர்கள் ராதா, பிரதிபா, பிளாரன்ஸ், எஸ்.எஸ்.ஏ ஆசிரியர்கள் ராஜாராம் செந்தில் உள்ளிட்ட பலர் பங்கேற்று ஆய்வு செய்து பாராட்டினர்.


ICICI Home Finance

**கார்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா
**கிளை அலுவலகம்:** ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601

[விதி 8(6) விதிகளை காண்க]

**அசையா சொத்துகள் விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகள் உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் அசையா சொத்து இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/உப கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்/ கடன் கணக்கு எண் | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலத் தேதி & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | B அன்பழகன் (கடன்தாரர்) கோமதி A (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000857730 | மனை எண் 18, SF எண் 97/1A & 97/1B1, லட்சுமி நகர், பல்லடம் சாலை தொலைவில், காரைப்புதூர் கிராமம் & ஊராட்சி, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம் | ₹36,81,162/– (23 பிப்ரவரி, 2022 தேதியன்று) | ₹ 47,27,775/– / ₹ 4,72,778/– | மார்ச் 25, 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | மார்ச் 29, 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை |
| 2. | லட்சுமணன் M (கடன்தாரர்) ரேவதி L (உப–கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000875044/ NHTIR00000875042 | கதவு எண் 30, டிஎஸ் எண் 4/81, பிள்ளையார் கோவில் தெரு, கல்லம்பாளையம், திருப்பூர் வட்டம், மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 641602 | ₹33,10,459/– (23 பிப்ரவரி, 2022 தேதியன்று) | ₹ 37,91,050/– / ₹ 3,79,105/– | மார்ச் 25, 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | மார்ச் 29, 2022 பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்ஸன் டைகர் இணையதளத்தில் (URL இணைப்பு https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **மார்ச் 28, 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601** இடத்தில் **மார்ச் 28, 2022 மாலை 05.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட நேரத்தின்படி அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை என்றால் கையொப்பமிட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் நகல்பிரதியை **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601** இடத்தில் **மார்ச் 28, 2022 மாலை 5.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஆனது **திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்–ஏலம்"** பெயரில் ஒரு தேசியமயமாக்கப்பட்ட/பட்டியலிடப்பட்ட வங்கி மூலமானதாக இருக்க வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

**நாள்: பிப்ரவரி 27, 2022**
**இடம்: திருப்பூர்**

**அதிகாரப்பூர்வ அதிகாரி**
**ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்**